DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR

O.S.NO.129/2019 PW 2

Name மாதவன்

Father's Name

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

13.12.2023.

**குறுக்கு விசாரணை**

நான் வாதி மற்றும் பிரதிவாதி நண்பர்கள் என்றால் சரிதான். நாங்க்ள் கரவைமாடு வைத்துள்ளோம். விவசாயம் செய்கிறோம். சாட்சி சொல்ல எனக்கு அழைப்பாணை வரவில்லை. வாதி சொல்லி தான் வழக்கு விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் தெலுங்கு மொழியில் மொழி பெயர்த்த பிறகு எனக்கு தெரியவந்தது என்றால் சரிதான். நான் சொன்ன விவரங்களை வழக்கறிஞர் பதிவு செய்தார். அது தான் எனது பிரமாண வாக்குமூலம். அடமான கடன் பத்திரத்தில் கிருஷ்ணமூர்த்தி கையொப்பம் செய்தார் எனவும் அதன்பின்பு நான் முதல் சாட்சியாக கையொப்பம் மிட்டுள்ளதாகவும் இரண்டாவது சாட்சியாக முனுசாமி கையொப்பம் இட்டதாகவும் அதன்பின்பு பத்திரத்தினை தயார் செய்து பதிவு செய்த பத்திர எழுத்தர் சத்தியநாராயணன் கையொப்பம் செய்ததாகவும் எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை தயார் செய்வதற்கு முன்பாகவே மொழிபெயர்ப்பு செய்ய வழக்கறிஞர் திரு.வேணுகோபால் இருந்தார். வாதி கிருஷ்ணய்யா நான் தாக்கல் செய்த வழக்கில் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே மாந்தோப்பு குத்தகை சம்பந்தமாக பிரச்சனை இருந்தது எனக்கு தெரியும். அந்த குத்தகை பத்திரம் குறித்த விவரம் எனக்கு தெரியாது. அந்த குத்தகை சம்பந்தமாக காவல்

நிலையத்தில் புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியும். 2018 வருடம் வாதி கடன் கொடுத்தார். கடன் பத்திரம் எழுதும் சமயத்தில் நான் வாதி, பிரதிவாதி மற்றும் பத்திர எழுத்தர், சாட்சி முனுசாமி ஆகியோர் இருந்தோம். 500 ரூபாய் கட்டுகள் இருபது வாதி கொடுத்தார். பிரதிவாதி எதற்காக கையொப்பம் வாங்கினார் என்றால் வீட்டு செலவிற்காக என்று கூறினார். அந்த ரொக்க பணத்தை மாந்தோப்பில் இருந்து வந்த வாதி பிரதிவாதிக்கு கொடுத்தார். வேறு ஏதேனும் வாதியிடமிருந்து பிரதிவாதி வாங்கியுள்ளாரா எ்ன்று எனக்கு தெரியாது. 27.09.2018ல் வாதி பிரதிவாதி இருவரும் சென்று வாங்கினார்கள். வாதசாஆ 1 கடன் பத்திரத்தை ஆவண எழுத்தர் சத்திய நாராயணன் தெலுங்கில் படித்து காண்பித்தார். அதன்பிறகு தான் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். மற்றொரு சாட்சி முனுசாமி தற்போது உயிருடன் இல்லை. வாதி பிரதிவாதிக்கு எதிராக இதே தேதியில் புரோநோட் அடிப்படையில் கடன் கொடுத்ததாகவும் அதற்கான வழக்கு திருத்தணி நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதும ் எனக்கு தெரியும். அதில் ஒரு வழக்கில் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றல் சரியல்ல. பிரதிவாதி கனரா வங்கியில் வழக்கு சொத்தை அடமானம ் வைத்து கடன் வாங்கியுள்ளார் ் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 13.10.2014 அன்று ரூ.2 லட்சம் பிரதிவாதி கடன் வாங்கியிருந்தார். அதனை திரும்ப கொடுத்த முடித்துவிட்டார். 17.09.2018ல் அந்த கடன் முடிக்கப்பட்டது. ரூ.10லட்சம் 01.10.2018ல் பிரதிவாதி பெற்றார். கடனை முடித்துவிட்டு மீண்டும் 13 நாட்களில் பிரதிவாதி கடன் வாங்கவேண்டிய அவசியமில்லை என்றாலும் அவருக்கு மது வழங்கி மது போதையில் ஒரு பொய்யான ஆவணம் தயாரித்துவிட்டோம் என்றால் சரியல்ல. அதன் காரணமாக தான் 27.09.2018ல் வாங்கிய ஸ்டேம்ப் பத்திரத்தில் அக்டோபர் 2018 பத்திரத்தில் ஆவணம் தயாரித்து பதிவு செய்ததாக சொல்லியுள்ளோம் என்றால் சரியல்ல. 27.09.2018 அன்று நேரமாகிவிட்ட காரணத்தினாலும் மறுநாள் வெள்ளி கிழமை என்பதால் வாதி பணம் கொடுக்கமுடியாது என்று சொன்ன காரணத்தினாலும் அதன்பிறகு சனி மற்றும் ஞாயிறு சார்பதிவாளர் அலுவலகம் விடுமுறை என்ற காரணத்தினாலும் 01.10.2018

அன்று பத்திரம் பதிவு செய்தோம். பிரதிவாதி அடமான வைத்த சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. பிரதிவாதி சகோதரர்களுக்கும் அடமான சொத்தில் பங்கு உள்ளது என்றால் அவர்களுக்கும் பாகம் பிரிவினை ஆகிவிட்டது. அது 4 ஏக்கர் சொத்து பிரதிவாதிக்கு 2 ஏக்கர் உரிமையுள்ளது. எனது வழக்கில் வாதி சாட்சியாக இருந்து உதவி செய்த காரணத்தினால் அவரது வழக்கிலும் நான் சாடசியாக இருந்து உதவி செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.